# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 31-03-2022 வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானங்கள்.

## நகர்மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) மார்த்தாண்டம் சந்தையின் ஒருபகுதியில் இயங்கி வரும் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் பிரிவை மாற்றி பம்மம் உரக்கிடங்கில் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 1 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) வினோத் மருத்துவமனை முதல் மதி கோழிக்கடை வரை உள்ள சாலையில் கழிவுநீர் ஒடை அமைத்து சிலாப் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 1 - (2) தீர்மானிக்கப்பட்டது.**

3) முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. ஹெலன் டேவிட்சன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட மார்த்தாண்டம் ஆர்.சி.தெரு சாலையில் இருக்கும் படிப்பகத்தை சீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 1 - (3) தீர்மானிக்கப்பட்டது.**

4) மார்த்தாண்டம் பேருந்து நிலையம் பக்கத்தில் திரு. தயாளன் வீட்டின் அருகில் இருந்து மஞ்ஞாணிவிளை செல்லும் சாலையில் நகராட்சி எல்கை வரையிலும் ஒடை கட்டி சிலாப் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 1 - (4) தீர்மானிக்கப்பட்டது.**

5) மார்த்தாண்டம் டிவைன்ஸ் ஹோட்டல் அருகில் இருந்து நகராட்சி கிணறு இருக்கும் பகுதியில் ஓடை அமைத்து காங்கிரீட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 1 - (5) தீர்மானிக்கப்பட்டது.**

6) குழித்துறை நகராட்சியில் உள்ள தினசரி காய்கறி சந்தையில் A, B, C, D, E பிளாக்குகளில் செயல்படும் கடைகளை இடித்து விட்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் புதிய தினசரி சந்தை அமைக்கப்பட உள்ளது. அதன் பொருட்டு மேற்படி கடைகளுக்கு பதில் சந்தையில் கடைகள் கட்டி முடிக்கும் வரை மாற்று இடம் வழங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் குழித்துறை நகராட்சி பராமரிப்பில் உள்ள லாறி பேட்டையில் மீன்வண்டியில் வந்து மீன்கள் இறக்கி விற்பனை செய்வதால் லாரிகள் சாலையின் இருபுறமும் நிற்ப்பதால் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்கள் மிகவும் பாதிக்கப்படுவதாக நேரடியாக புகார்கள் தெரிவிக்கப்பட்டன. எனவே பொது மக்கள் நலன் கருதி லாறிபேட்டையில் மீன் வாகனங்கள் வந்து செல்வதை தற்காலிகமாக நிறுத்தம் செய்ய வேண்டும். மேலும் லாறி பேட்டையில் தற்காலிகமாக (அதாவது புதிய தினசரி காய்கறி சந்தை கடைகள் கட்டிமுடிக்கும் வரை) தினசரி காய்கறி சந்தையில் வியாபாரிகளுக்கு தற்காலிக கடை அமைத்து இடம் ஒதுக்கீடு செய்யக் கேட்டுக்கொள்கிறேன். மேற்படி தினசரி சந்தையில் புதிய கடைகள் கட்டி முடிக்கும் வரை லாறிபேட்டையில் தற்காலிகமாக காய்கறி வியாபாரம் செய்ய தற்காலிக கடைகளை ஓட்டு மொத்தமாக பொது ஏலத்திற்கு கொண்டு வரை மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 1 - (6) தீர்மானிக்கப்பட்டது.**

**<u>நகர்மன்ற துணைத்தலைவர் திரு.மு.பிரபின் ராஜா கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) குழித்துறை நகராட்சி பகுதியில் குடிநீருக்காக அமைக்கப்பட்டுள்ள பழுதடைந்த மின்மோட்டார்கள் மற்றும் குடிநீர் தொட்டிகளை பழுது பார்த்து பயன்பாட்டிற்கு கொண்டுவர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 2 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) கல்லுகட்டி திரு. ஜார்ஜ் அவர்களின் வீட்டிலிருந்து வித்யாதி ராஜா பள்ளி வரை உள்ள வடிகால் ஒடையை தூர்வாரி சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 2 - (2) தீர்மானிக்கப்பட்டது.**

<u>**2-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.T.R. ஜெயந்தி கொண்டு வரும் தீர்மானம்**</u>

1) உண்டனாகுழி- திருத்துவபுரம் சாலையில், திரு. ஏசுதாஸ் வீட்டின் அருகாமை முதல் தங்கையன் வீட்டு அருகாமை வரையிலும் இடைபட்ட பகுதியில் வேலப்பன் வீட்டு அருகாமை முதல் வீனுகுமார் வீட்டின் அருகாமை வரை கான்கிரேட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 3 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) பெருங்குளம் கிணற்றிலிருந்து, மோட்டார் பொருத்தி குழாய் மூலம் திரு. இருதாயராஜ் வீட்டின் அருகாமையில் சிண்டக்ஸ் டாங் வைத்து வீடுகளுக்கு தண்ணீர் வழங்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 3 - (2) தீர்மானிக்கப்பட்டது.**

3) வைச்சரோடு முடிவில் உண்டனாகுழி ரோடு இணைப்பு சாலையில் பக்கசுவர் கட்டி Concrete தளம் அமைத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 3 - (3) தீர்மானிக்கப்பட்டது.**

4) வைச்சராரோடு முதல் காவுவிளை வரை Concrete அமைத்து சிறுபாலம் அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 3 - (4) தீர்மானிக்கப்பட்டது.**

**<u>3-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.லு. ஷாலின் சுஜாதா கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) நரியன்விளையில் இருந்து ஜேக்கப் நகர் செல்லும் சாலையை தார் தளம் அமைத்தல்.

**மன்றத்தீர்மான எண். 4 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) வெட்டுக்காட்டு விளையில் பிரான்சிஸ் வீட்டின் அருகில் உள்ள நடைப்பாதையை காங்கிரீட் தளம் அமைத்தல்.

**மன்றத்தீர்மான எண். 4 - (2) தீர்மானிக்கப்பட்டது.**

3) இடைவிளாகம் முருவிளாஞ்சியில் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான கிணற்றை இறைத்து சுத்தம் செய்தும் அதில் மின் மோட்டார் பொருத்தவும் அந்த கிணற்றில் ஒர் மூடி போடவும் தீர்மானித்தல்.

**மன்றத்தீர்மான எண். 4 - (3) தீர்மானிக்கப்பட்டது.**

**<u>4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சி. லலிதா கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) கோலக்காடு முதல் ஈழக்குடி வரை ரோடு செப்பனிடவும்.

**மன்றத்தீர்மான எண். 5 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) ஈழக்குடிவிளையில் ரோட்டோரம் நிற்கும் அயனி மரம் போக்குவரத்திற்கு இடையூறாகவும், பக்கத்தில் சதீஸ் என்பவர் வீட்டின் மீது விழும் ஆபத்தான நிலையில் உள்ளது. அதனை அப்புறப்படுத்தவும்.

**மன்றத்தீர்மாஎண்.5- (2)சம்மந்தப்பட்ட துறையைகேட்டு தீர்மானிக்கப்பட்டது.**

3) கல்வெட்டான் பறம்பு முதல் குறுமத்தூர் பாலவிளை வரை காங்கிரீட் தளம் அமைக்கவும்.

**மன்றத்தீர்மான எண். 5 - (3) தீர்மானிக்கப்பட்டது.**

## 5-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.S. ஆட்லின் கெனில் கொண்டு வரும் தீர்மானம்

1) 5-வது வார்டு உட்பட்ட பகுதிகளில் மழைநீர் ஒடைகளில் தூர்வாரி சிலாப் போட்டு மூட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 6 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) பி.எஸ்.என்.எல். ஆபிசுக்கு கீழ் உள்ள இரண்டு மின்கம்பங்களில் புதிதாக தெருவிளக்கு அமைக்கவும் (1) K.K.ஸ்டோர் அருகாமையில் (2) பந்தல் முருகன் வீட்டிற்கு பாதையிலும் மேலும் பி.எஸ்.என்.எல். ஆபிசுக்கு மேல் உள்ள பிரதீஷ் அவர்கள் வீட்டின் முன் உள்ள மின்கம்பத்தில் புதிதாக மின்விளக்கு அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 6 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) 5-வது வார்டுக்கு உட்பட்ட சாலையில் ஏற்பட்டுள்ள பள்ளங்களில் மண்போட்டு நிரப்பி தற்காலிக பயன்பாட்டிற்கு சீர் செய்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 6 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) ஆர்.சி. தெருவில் உள்ள மின்விசை குடிநீர் தொட்டியை சீர் செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 6 - (4) தீர்மானிக்கப்பட்டது**

5) கின்ஸ் மருத்துவமனை எதிர்புறம் உள்ள நகராட்சி கிணற்றில் இருந்து குழாய் அமைத்து எலக்ட்ரிசன் அனி என்பவரின் வீட்டின் அருகாமையில் புது குடிநீர் குழாய் அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 6 - (5) தீர்மானிக்கப்பட்டது**

<u>6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.V.</u> விஜு <u>கொண்டு வரும் தீர்மானம்</u>

1) மேட்டு கிராமம் திரு. ஐயப்பன் அவர்கள் வீட்டின் முன் பகுதியில் இருந்து கீழ் கிராமம் முடியும் இடம் வரை ஒடை அமைத்து சிலாப் போட்டு காங்கிரீட் சாலை போடுவது என மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 7 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) பெருந்தெரு முத்தாரம்மன் கோவில் பின்புறம் திரு. கலாதரன் அவர்கள் வீட்டின் அருகில் இருந்து சந்தை வரையிலும் ஒடை வீதி கூட்டி கட்டி சிலாப் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 7 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) முன்னாள் மத்திய அமைச்சர் ஸ்ரீமான் . பொன் இராதாகிருஷ்ணன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட பெருந்தெரு சந்தையை நவீனப்படுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 7 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) கிராமத்தில் உள்ள இரண்டு கிணறுகளையும் தூர்வாரி, மின்மோட்டார் வைத்து சீரான குடிநீர் கிடைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 7 - (4) தீர்மானிக்கப்பட்டது**

5) பெருந்தெரு ஹெல்த் சென்டர், பெருந்தெரு முருகன் வீடு, பெருந்தெரு டிரான்ஸ்பார்மர் அருகில் உள்ள மின் கம்பங்களில் மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 7 - (5) தீர்மானிக்கப்பட்டது**

<u>7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.U.R. விஜயலெட்சுமி கொண்டு வரும் தீர்மானம்</u>

1) கச்சேரி வார்டில் கோர்ட் சாலையில் வழக்கறிஞர் திரு. மோகனன் நாயர் வீடு அருகிலிருந்து தபால் நிலையம் ஜங்சன் வரை உள்ள ஓடை சரி செய்து சிலாப்பு போட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 8 - (1) தீர்மானிக்கப்பட்டது.**

2) இடைத்தெரு சாலை குடிநீர் குழாய்கள் அமைப்பதற்கு உடைக்கப்பட்டு தற்போது வாகனங்கள் செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே புதிய சாலை அமைப்பதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 8 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) திரு. பகத்சிங் அவர்களின் வீடு முன் ஓடை புதியதாக அமைத்து சிலாப்பு போட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 8 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) படப்பறை குளம் தற்போது குப்பைகள் நிறைந்து சுகாதார கேடு ஏற்பட்டு மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. குளத்தை தூர்வாரி சரி செய்ய PWD -வை கேட்டும், நகராட்சியில் பக்க சுவர் அமைக்க நகர்மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண்.8 - (4) சம்மந்தப்பட்ட துறையை கேட்டு மன்றம் தீர்மானிக்கப்பட்டது.**

<u>8-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.G.S. மினிகுமாரி. கொண்டு வரும் தீர்மானம்</u>

1) குழித்துறை சந்திப்பு அண்ணாசிலை முன்பு உள்ள உயரகோபுர மின்விளக்கு நிறுவப்பட்ட போது உள்ள அதன் வெளிச்சத்தை மீண்டும் கொண்டு வர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 9 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) குழித்துறை பழைய பாலம் மற்றும் புதிய பாலம் தொடங்கும் இடத்தில் தற்போது பேருந்து நிறுத்தம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த பகுதி இருள் சூழ்ந்து காணப்படுகிறது. எனவே அதில் சிறிய அளவில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 9 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) குழித்துறை நகராட்சி வார்டு எண்.8-ல் குழித்துறை சந்திப்பு கழிவறை மற்றும் மத்திய அரசின் தூய்மை இந்திய திட்டத்தில் கட்டப்பட்ட மூன்று கழிவறைகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சுகாதார முறையில் செயல்படுத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 9 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) செங்கன்மூலை வார்டில் ராஜீவ் நகரில் இருந்து இலுப்பவிளை சாலை சீரமைத்து செப்பனிட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 9 - (4) தீர்மானிக்கப்பட்டது**

<u>9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.பி. ரவி கொண்டு வரும் தீர்மானம்</u>

1) விளவங்கோடு சாலையிலிருந்து மேலேசாணிவிளை செல்லும் சாலையில் திரு. ரவி அவர்கள் வீட்டின் எதிர்புறம் நிற்கும் மின்கம்பத்தில் ஒரு மின்விளக்கும், திரு. விஜயன் அவர்களின் வீட்டின் எதிர்புறம் நிற்கும் மின்கம்பத்தில் ஒரு மின்விளக்கும், சாலையின் கடைசியில் நிற்கும் 8 மின்கம்பத்தில் 7 மின்விளக்கும் சேர்த்து மொத்தம் 9 தெருவிளக்குகள் போட்டு தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 10 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) குழித்துறை-விளவங்கோடு சாலையில் ஆற்றின் அருகாமையில் வெள்ள பெருக்கில் உடைக்கப்பட்டுள்ள சாலையை செப்பனிட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 10 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) குழித்துறை-விளவங்கோடு சாலையை செப்பனிட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 10 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) குழித்துறை- மடிச்சல் சாலை செப்பனிடவும், ஒடை உடைந்த பகுதிகளில் ஒடை சரி செய்யவும், பக்கசுவர் கட்ட வேண்டிய திற்பிலாங்காடு பகுதியில் பக்கசுவர் கட்டவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 10 - (4) தீர்மானிக்கப்பட்டது**

5) குழித்துறை- கல்லுகெட்டி சாலை (பழைய எம்.எஸ்.சாலை) செப்பனிட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 10 - (5) தீர்மானிக்கப்பட்டது**

6) விளவங்கோடு மாலை சந்தை பின்பக்க சாலையிலிருந்து திருசேபனம் வீட்டு அருகாமையிலிருந்து கல்லறை தோட்டத்துக்கு செல்லும் சாலையில் தரை ஒடு (Inter look) தளம் பதிக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 10 - (6) தீர்மானிக்கப்பட்டது**

**10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.G. ஜெயின்சாந்தி கொண்டு வரும் தீர்மானம்**

1) குழித்துறை நகராட்சி வார்டு எண்.10-ல் பனவிளை சுற்றுபுற பகுதிக்குட்பட்ட பொதுமக்கள் ஆற்றுக்கு குறிக்க செல்லவும், பிலாமண் விளை பகுதிக்கு செல்லவும் ஏதுவாக ஏற்கனவே நகராட்சி சார்பில் மதில் சுவர் கட்டிய பகுதியில் படிக்கட்டு கட்டுவதுடன் வயதானவர்கள் நடந்து செல்ல கம்பியால் ஆன கைபிடி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 11 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) தேவிகுமாரி மகளிர் கல்லூரி சாலையில் இடதுபக்கமும், வலது பக்கமும் தேவிகுமாரி கல்லூரி நுழைவு வாயில் முதல் கொற்றாடை வரை ஒடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 11 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) பழவார் சாலையில் உள்ள 10-43 எண் மின்கம்பத்தில் தெருவிளக்கு பொருத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 11 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) வார்டு எண்.10-ல் பிலாமண் விளையில் நகராட்சியால் போடப்பட்ட ஆற்றுக்கு செல்லும் காங்கிரீட் பாதை உடைந்து காணப்படுகிறது. அதை சரி செய்து இரண்டு தெருவிளக்கு போட்டு பொதுமக்கள் குழிப்பதற்கு ஏதுவாக படிகட்ட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 11 - (4) தீர்மானிக்கப்பட்டது**

**11-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.J.K. றோஸ்லெட் கொண்டு வரும் தீர்மானம்**

1) 11-வது வார்டு வெட்டுவெந்நி முதல் கண்ணக்கோடு வரை உள்ள சாலை சீரமைக்க வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 12 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) 11-வது வார்டு கண்ணக்கோடு முதல் ரேசன் கடை வரை உள்ள சாலையை போர்கால அடிப்படையில் சீரமைக்க வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 12 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) 11-வது வார்டு டாக்டர் காவேரி கண்ணன் வீடு முதல் காஞ்சினிகடவு வரை உள்ள ஒடை உடைந்துள்ளது. அதை சீரமைத்து தர வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 12 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) 11-வது வார்டு சாலியன் விளை முதல் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் பின்புறம் வரை உள்ள சாலையை சீரமைக்க வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 12 - (4) தீர்மானிக்கப்பட்டது**

5) 11-வது வார்டு வெட்டுவெந்நி பூங்காவில் படிப்பகம் அமைத்து தர வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 12 - (5) தீர்மானிக்கப்பட்டது**

**12-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கி.செ. ஜீலியட் மெர்லின் ரூத் கொண்டு வரும் தீர்மானம்**

1) கண்ணக்கோடு (Junction) பழைய ரேஷன் கடை முதல் Sinclair Street வரை, Sinclair Street முதல் பந்நியந்நி வரையுள்ள ரோடு சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 13 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) திட்டவிளை- கடகன் விளை கிளை சாலை ரெயில்வே லைன் வரை முழுமையாக பழுதடைந்துள்ளது. அச்சாலையை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 13 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) திட்டவிளை (கண்ணக்கோடு)CSI Church முன்புறம் உள்ள தண்ணீர் Tank Motor பழுதடைந்துள்ளதை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 13 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) BOC Street-ல் சாலையில் பாதசாரிகளுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் இருக்கும் மின்கம்பத்தை (Ward 12 மின்கம்பம் எண்.13) மாற்றி புதிய மின்கம்பம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 13 - (4) தீர்மானிக்கப்பட்டது.**

5) BOC Street- பழுதாகியுள்ள குடிநீர் குழாய்களை உடனடியாக சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 13 - (5) தீர்மானிக்கப்பட்டது.**

**<u>13-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.T.S.. பெர்லின் தீபா கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) பந்நியாணி சந்திப்பு முதல் பந்நியாணி சர்ச் வரை புதிதாக மழைநீர் வடிகால் அமைக்க, சாலை போதிய அகலமில்லாததால் சாலையின் மையப்பகுதியில் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 14 - (1) இடம் பார்வையிட்டு முடிவு செய்வது என தீர்மானிக்கப்பட்டது.**

2) கண்ணக்கோடு ரேஷன்கடை முதல் உண்ணாமலைக்கடை பஞ்சாயத்து எல்லை முடியும் வரை நகராட்சிக்குட்பட்ட சாலையை மக்கள் பயன்பாட்டிற்கேற்றவாறு போர்க்கால அடிப்படையில் சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 14 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) பந்நியணி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி முதல் நகராட்சி எல்லை முடியும் வரை சாலையின் வலதுபுறத்தில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகாலை சீரமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 14 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) கண்ணக்கோடு ரேஷன் கடை முதல் பழைய ரேஷன் கடை வரை உள்ள சாலையை சீரமைத்து பொதுமக்கள் சிரமமின்றி பயணம் செய்ய ஏற்றதாக மாற்ற மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 14 - (4) தீர்மானிக்கப்பட்டது**

5) பந்நியணி ரெஜினிகுமார் அவர்களின் வீட்டின் முன் உள்ள மின்கம்பத்தில் மின்விளக்கு புதிதாக அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்

**மன்றத்தீர்மான எண். 14 - (5) தீர்மானிக்கப்பட்டது**

**<u>14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. . லில்லி புஷ்பம் கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) வடக்கு தெரு கான்வென்று ரோடு அதில் குருசடியில் இங்கு வரும் குழாயிலிருந்து அந்த பக்கம் நான்கு குழாய் போகிறது. அதையும் மாற்றி அக்கிவிளை, காமனாட்டுவிளை, வாத்தியாக்குடி ஆகிய இடங்களில் குடிநீர் கிடைக்க குழாய்களை சரி செய்து தண்ணீர் வர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 15 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) கான்வென்று ரோடு ஒடை, காமனாட்டுவிளை ஒடையில் மின்கம்பம் நிற்கிறதை எடுத்து மாற்றி அந்த ஒடைகளை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 15 - (2) இடவசதியை பொறுத்து முடிவு செய்வது என தீர்மானிக்கலாம்**.

3) கான்வென்று ரோடு, காமனாட்டுவிளை ரோடு ஆகியவற்றிற்கு காங்கிரேட் போடவும் அழகேசன் வீட்டுக்கு மேல் செல்லும் நடைப்பாதையில் இண்டர்லாக் போட்டு சரி பண்ணவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 15 - (3) தீர்மானிக்கப்பட்டது**

**<u>15-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ரீகன் கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) 15-வது வார்டு பகுதியில் காவல் நிலைய குடியிருப்பு பின்புறம் திரு. செல்வமணி அவர்கள் வீட்டின் அருகில் இருந்து திரு. ஜார்ஜ்ஸ்டிபன் வீடு முன் வரை காங்கிரீட் தளம் அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 16 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) 15-வது வார்டு பகுதி அட்டக்குளம் குளத்திப்பாறை ஸ்ரீ இசக்கி அம்மன் திருக்கோவில் முன் கழிவுநீர் ஒடை உடைந்துள்ளது. அதை சீரமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 16 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) 15-வது வார்டு பகுதி காமனாட்டு விளை கருணாகரன் வீட்டின் முன் உள்ள கழிவுநீர் ஒடை சரி செய்யப்பட்டுள்ளது. மீதி உள்ள 19 மீட்டர் ஒடையும் கூடிய காங்கிரீட் மூடி அமைத்து தர மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 16 - (3) தீர்மானிக்கப்பட்டது**

<u>**16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.K. இரத்தினமணி கொண்டு வரும் தீர்மானம்**</u>

1) மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் இருந்து நாகர்கோவில் நோக்கி இயக்கப்படும் அனைத்து பேருந்துகளும் பொதுமக்களின் நலன் கருதி மேம்பாலத்தின் கீழ்பக்கம் வழியாக செல்ல நடவடிக்கை எடுக்க போக்குவரத்து துறையை கேட்டு தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 17 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) மார்த்தாண்டம் நகரின் மைய பகுதியில் இருந்து அட்டை குளம் பகுதியில் செல்லும் மழைநீர் வடிகால்-யை காவலர் குடியிருப்பின் பின்புறம் உள்ள வடிகால் ஒடையில் இணைத்து கொடுங்குளம் பகுதியில் மழை காலங்களில் வீடுகளில் மழைநீர் உட்புகுவதை தடுக்கும் விதமாக நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 17 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) கொடுங்குளம் சாலையில் ஏற்கனவே சீரமைக்கப்பட்டு பாதியில் உள்ள காங்கிரீட் தளம் அமைக்கும் பணி மீதி உள்ள பகுதியிலும் அமைக்க தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 17 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) கொடுங்குளம் காவல் நிலைய பின்புறம் மின்கம்பம் 84-ல் உள்ள சோடிய ஆவி விளக்கை அருகில் உள்ள மின்கம்பத்தில் மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 17 - (4) தீர்மானிக்கப்பட்டது**

5) கொடுங்குளம் புதுக்குளத்துவிளை குமரேசன் அவர்கள் வீட்டின் முன்பக்க மின்கம்பத்தில் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 17 - (5) தீர்மானிக்கப்பட்டது**

6) அஞ்சுவீடு கிருஷ்ணபிள்ளை வீட்டின் முன்பக்கம் மின்கம்பத்தில் குழல்விளக்கு அமைக்க தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 17 - (6) தீர்மானிக்கப்பட்டது**

7) குலசேகரம் ரோட்டில் இருந்து அஞ்சுவீடு செல்லும் பாதையில் இருக்கும் முதல் மின்கம்பத்தில் சோடிய விளக்கு அமைக்க தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 17 - (7) தீர்மானிக்கப்பட்டது**

**17-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.A. அருள்ராஜ் கொண்டு வரும் தீர்மானம்**

1) வடக்கு தெரு குருசடி பின்புறத்திலிருந்து மேலக்குளம் செல்லும் நடைபாதை காங்கிரீட் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 18 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) .பாஸ்டேஸ் லைனிலிருந்து சிங்களேயர் தெரு செல்கின்ற பாதை காங்கிரீட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 18 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) வடக்கு தெருவிலிருந்து மேலக்குளம் செல்கின்ற சாலையில் 2 தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்க. ஐசக் வீட்டு பக்கம் நிற்கின்ற மின்கம்பத்தில் 3 லைட் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 18 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) கோவில் விளை நாகப்பன் ஆசிரியர் செல்கின்ற பாதையில் 2 தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 18 - (4) தீர்மானிக்கப்பட்டது**

5) மேலக்குளம் EX, கவுன்சிலர் ஜோசப் சுகி வீட்டுக்கு செல்கின்ற பாதையில் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 18 - (5) தீர்மானிக்கப்பட்டது**

**20-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.M. சர்தார் ஷா கொண்டு வரும் தீர்மானம்**

1) 20-வது வார்டு PNP காம்பவுண்டில் அமைந்துள்ள போர்வெல் தண்ணீர் தொட்டி உடைந்துள்ளதை மாற்றி 1000 லிட்டர் சின்டெக்ஸ் தொட்டி 2 எண்ணம் புதிதாக மாற்றியமைத்து குடிநீர் கிடைக்க செய்ய வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 19 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) மார்த்தாண்டம் ஆர்.சி.தெருவில் சாங்கோ மெடிக்கல் பின்புறம் பழுதடைந்துள்ள இன்டர்லாக் சாலையை உடனே பழுது நீக்கி தர வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 19 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) பெரும் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிற மார்த்தாண்டம் ஆர்.சி.தெருவில் திரு. ரெய்மண்டு அவர்கள் வீட்டின் அருகில் இருந்து திருமதி. ரோஸ்மேரி, சுனில் வீடு வரையுள்ள பகுதியில் குடிநீர் சப்லைன் வினியோக பைப் அமைத்து குடிநீர் கொண்டுவர வேண்டி மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 19 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) மார்த்தாண்டம் ஆர்.சி.தெருவில் பயன்பாடற்ற நிலையில் உள்ள படிப்பகத்தை (டெம்போ ஸ்டாண்ட் அருகில்) மாற்றி அந்த இடத்தில் நகராட்சி சார்பில் பொதுச்சேவை மையம் மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 19 - (4) படிப்பகத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வர தீர்மானிக்கப்பட்டது**

**<u>21-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கே. செல்வகுமாரி. கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) வார்டு 21-ல் குலசேகரம் ரோட்டையும் தேசிய நெடுஞ்சாலையையும் இணைக்கும் சானல் ரோடு மற்றும் வடிகால் பழுதடைந்து உள்ளது சரி செய்ய மன்ற தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 20 - (1) தீர்மானிக்கப்பட்டது**

2) கீழ்பம்மம் பேருந்து நிறுத்தம் எதிரில் உள்ள கல்வெட்டு பழுதடைந்து உயிர் பலி வாங்கும் பகுதியாக உள்ளதால் சரி செய்து தர மன்ற தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 20 - (2) தீர்மானிக்கப்பட்டது**

3) S.E.T.C. டிப்போ-வின் மேற்கு பகுதியில் இருக்கும் வடிகால் ஒடையை சீரமைக்க மன்ற தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 20 - (3) தீர்மானிக்கப்பட்டது**

4) சுமங்கலி திருமண மண்டபம் அருகில் இருந்து சிறியகாட்டுவிளையை இணைக்கும் வழிப்பாதையின் கடைசியில் மின்கம்பம் நட்டு மின் விளக்கு அமைக்க மன்ற தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 20 - (4) தீர்மானிக்கப்பட்டது**

5) சிறியகாட்டுவிளையில் இருந்து குலசேகரம் ரோட்டை இணைக்கும் புதிய சாலையை சீரமைக்கவும் பொதுமக்கள் பயன்படுத்த பக்க சுவர் அமைத்து தரவும் மன்ற தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 20 - (5) தீர்மானிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 1</u>

திருமதி.எம்.சி. ஷீலா இவாஞ்சலின், வருவாய் உதவியாளர் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு WP(MD)No.16043/2020-ன் வக்காலத்து தாக்கல் செய்தமைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.3783/2007/சி1.

**மன்றத்தீர்மான எண். 21 - (1) ஒத்திவைக்கப்பட்டது**

<u>பொருள் எண். 2</u>

இந்நகராட்சியில் 2020-2021-ம் ஆண்டிற்கான தணிக்கை புத்தகங்கள் அச்சிடப்பட்ட வகைக்கு ரூ.15150/- E. அருந்ததி பெயருக்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கு.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2132/2018/பி1.

**மன்றத்தீர்மான எண். 22 - (2) அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 3</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரம் கொரோனா விதிமுறைகள் மற்றும் நீர் நிலை ஆதாரங்களை பாதுகாப்பது தொடர்பான விளம்பர அறிவிப்பினை 12-120-2021-ல் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் பட்டியல் தொகை ரூ.9840/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.1151/2017/அ2

**மன்றத்தீர்மான எண். 23 - (3) அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையின் STAR RATING - தொடர்பான விளம்பர அறிவிப்பினை 25-02-2022 தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூ.5208/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1812/2020/அ2

**மன்றத்தீர்மான எண். 24 - (4) அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு (ODF) அதன் அடுத்த நிலை (ODF+) சான்று பெறுவதற்கு பொது மக்களின் கருத்துக்கள் பெறுவதற்கு விளம்பர அறிவிப்பினை 25-02-2022 அன்று மாலை மலர் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூ.4032/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1812/2020/அ2

**மன்றத்தீர்மான எண். 25 - (5) அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணிபுரியும் திருமதி. ஷீலா இவாஞ்சலின் என்பவர் தனக்கு நகரமைப்பு ஆய்வாளர் பணியிடம் வழங்கக் கோரி மதுரை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.WP(MD)163/2015-ன் மீது Addl. Advocate General அவர்களுக்கு 16-03-2015, 17-03-2015, 18-03-2015 மற்றும் 31-03-2015 ஆகிய நாட்களில் வழக்கில் ஆஜரான வகைக்கு செலவுத்தொகை ரூ.40,000/- வழங்க மன்ற அனுமதிக்கு.

அ.கு.- வழக்கின் அவசர அவசியத்தினை முன்னிட்டு தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3787/2000/சி1.

**மன்றத்தீர்மான எண். 26 - (6) ஒத்திவைக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 7</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு 18-03-2022-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. கீழ்கண்டவாறு ஏலத்தில் கலந்து கொண்டு ஏலகேள்வி கேட்கப்பட்டது.

I. பலன் தரும் மரங்கள் - எவரும் ஏலம் கோரவில்லை.

II. வாழைக்குலை உறையிடுதல்

| | | உச்சபட்ச ஏலக்கேள்வி தொகை | கடந்த ஆண்டு ஏலத்தொகை |
|---|---|---|---|
| (i) | சுந்தர்சிங்<br>த/பெ. ராஜமணி,<br>தாமரை குளம்,<br>கிணத்துகடவு | ரூ.5,67,000/- | ரூ5,63,376/- |
| (ii) | வினில்ராஜ்,<br>செக்காலவிளை,<br>படந்தாலுமூடு. | ரூ.5,70,000/- | |

III. காய்கறி சந்தை நுழைவு கட்டணம்

| | | உச்சபட்ச ஏலக்கேள்வி தொகை | கடந்த ஆண்டு ஏலத்தொகை |
|---|---|---|---|
| (i) | சுந்தர்சிங்<br>த/பெ. ராஜமணி,<br>தாமரை குளம்,<br>கிணத்துகடவு | ரூ.52,50,000/- | ரூ51,10,644/- |
| (ii) | வினில்ராஜ்,<br>செக்காலவிளை,<br>படந்தாலுமூடு. | ரூ.53,00,000/- | |

IV. மீன் சந்தை கட்டணம் வசூல்

ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஒத்திவைக்கப்பட்டது.

நடைபெற்ற பொது ஏலத்தில் வரிசை எண்.2-ல் காணும் வாழைத்தார் உறையிடுதல் இனத்திற்கு திரு. வினில்ராஜ் என்பவர் ரூ.5,70,000/-க்கு அதிகபட்ச தொகைக்கு கேட்டுள்ளார். இது சென்ற ஆண்டு குத்தபை தொகையினை விட கூடுதலாக உள்ளது. மேலும் வரிசை எண்.3-ல் காய்கறி சந்தையினுள் கட்டணம் வசூல் செய்யும் இனத்திற்கு திரு. வினில்ராஜ் என்பவர் உள்ள ஏலகேள்வியாக ரூ.53,00,000/- கேட்டுள்ளார். இத்தொகையும் கடந்த ஆண்டு குத்தகை தொகையினை விட கூடுதலாக உள்ளது. எனவே உயர்ந்த ஏலகேள்வி தொகையினை ஒப்பு கொள்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.
அ.கு. - மன்றம் பரிசிலித்து முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3066/2021/அ2.

**மன்றத்தீர்மான எண். 27 - (7) வரிசை எண்.II மற்றும் III உயர்ந்த ஏலக்கேள்வி ஒப்புக்கொள்ளப்பட்டது.**

<u>**பொருள் எண். 8**</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2-ல் உள்ள நரியன்விளையிலிருந்து இடைவிளாகம் செல்லும் (149002R005) சாலையானது தார் சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் 408M ஆகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினர் குடிநீர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பிரதான மற்றும் பகிர்மானக்குழாய் வீட்டு குடிநீர் இணைப்புகளை வழங்கும் போது சாலையானது மிகவும் பழுதடைந்து மக்களின் பயன்பாட்டிற்கு மிகவும் இடையூறாக உள்ளது. பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட புகாரின் நிமித்தம் 15-வது நிதிக்குழு மானிய நிதி 2020-2021-ன்கீழ் இச்சாலையின் ஒரு பகுதியானது சீரமைக்கப்படும் பொருட்டு ரூ.7.25 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேற்படி பணிக்கு 22-03-2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

1) திரு.பி. ஜெயராஜன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட (-) 0.07% குறைவு (635248.00)

2) திரு.எஸ். பாபு, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட (+) 1.05% அதிகம் (642390.00)

மேற்படி ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மேற்படி பணிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தத்தில் திரு.பி. ஜெயராஜன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட (-1) 0.07% குறைவான (ரூ.635248) வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.294/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 28 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 9**

குழித்துறை நகராட்சியின் ஞாறான்விளை பகுதியில் தலைமை நீரேற்று நிலையம் உள்ளது. இதன் வாயிற்பகுதியில் உள்ள மழைநீர் வடிகாலின் மீது சிறுபாலம் ஒன்று அமைந்துள்ளது. தற்பொழுது அச்சிறுபாலம் பழுதடைந்து வாகனங்கள் தலைமை நீரேற்று நிலையத்திற்கு செல்ல வழிவகை இல்லை. அவசர தேவைக்க கூட தண்ணீர் லாரியில் தண்ணீர் எடுக்க மிகவும் சீரமமாக உள்ளது. எனவே பழுதடைந்த சிறுபாலத்தினை அகற்றிவிட்டு புதியதாக சிறுபாலம் கட்டுவதற்கென மதிப்பீடு ரூ.1.30 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மேற்படி பணிக்கு 22-03-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

1) திரு.சி. ராஜன், ஒப்பந்ததாரர் — மதிப்பீட்டை விட (-) 0.82% குறைவு (109694.50)

2) திரு.எஸ். பாபு, ஒப்பந்ததாரர் — மதிப்பீட்டை விட (+) 2.19% அதிகம் (113032.00)

மேற்படி பணிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தத்தில் திரு.சி. ராஜன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட (-1) 0.82% குறைவான (ரூ.109694.00) ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். தொடர் மேல் நடவடிக்கைக்கு மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.583/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 29 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 10</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15-ல் காவல் நிலையத்தின் பின் பகுதியில் அமைந்துள்ள ஒடையின் ஆழம் சுமார் 2.50 மீட்டருக்கு மேலாக உள்ளது. ஒடையின் அருகில் உள்ள சாலையானது மிகவும் குறுகியதாக உள்ளதால் இரண்டு சக்கரத்தில் செல்பவர்கள் ஒடையினுள் தவறி விழுவதற்கு வாய்ப்பு உள்ளதால் அவ்ஒடையினை சீரமைத்து மூடி அமைத்து தரும்படி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதன்படி ஒடையினை சீரமைத்து கால்வாயின் மேலே கான்கிரீட் மூடி அமைப்பதற்கு ரூ.25.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 30 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 11</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் 40KVA Generator 3 எண்ணிக்கை, 45KVA Generator-1 எண்ணம் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் 15KVA -1 எண்ணம் மற்றும் 30KVA 1 எண்ணம் ஆக மொத்தம் 6 எண்ணிக்கை ஜெனரேட்டர்கள் மின்தடையின் போது பயன்பாட்டிற்கென செயல்பாட்டில் உள்ளன. இவற்றில் பழுது ஏற்படும்பொழுது பழுதுகளை சரிபார்க்கவும் அவ்வப்பொழுது Generator-களை Regular Service செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,95,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 31 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 12</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் மீன் சந்தை ஒன்று செயல்பட்டு வருகின்றது. இச்சந்தையில் சுமார் 100 ஆண்கள் மற்றும் பெண்கள் கடை நடத்தி வருகின்றனர். மேலும் நூற்றுக்கணக்கான பொதுமக்களும் வந்து மீன் கொள்முதல் செய்து செல்கின்றனர். இவர்களின் பயன்பாட்டிற்கென மீன்சந்தையில் பொது கழிப்பிடம் இல்லை என பொதுமக்கள் நகர்மன்றத் தலைவருடன் ஆய்வு

மேற்கொள்ளும் போது புகார் செய்தனர். எனவே பொதுமக்களின் நலன் கருதி நகர்மன்ற தலைவரின் அறிவுரையின்படி மீன் சந்தையின் பின் பகுதியில் உள்ள மாடுவதை செய்யும் கட்டிடத்தை கழிப்பிடமாக மாற்ற தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.00 இலட்சமாகும். பணியின் அவசியம் கருதி ஆகும் செலவினத்தை வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 32 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 13**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் உள்ள ஆர்.சி.தெருவில் நகராட்சிக்கு சொந்தமான படிப்பகம் ஒன்று உள்ளது. நகர்மன்றத் தலைவரின் ஆய்வின் போது அக்கட்டிடத்தின் தளம் பகுதி பழுதடைந்து காணப்பட்டு பயனற்ற நிலையில் இருந்தது. எனவே அதனை சீரமைத்து உடனே பயன்பாட்டிற்கு கொண்டு வரும்படி நகர்மன்ற தலைவரால் அறிவுறுத்தப்பட்டது. எனவே தளத்தை சரி செய்யவும் பக்கவாட்டில் சேதமடைந்த பகுதிகளை பூசி சரி செய்யவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.65,000/- ஆகும் மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 33 அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 14

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கலையரங்கம் ஒன்று வி.எல்.சி. மைதானத்தின் அருகில் அமைந்துள்ளது. இம்மண்டபம் கட்டப்பட்டு சுமார் 30 வருடங்களுக்கு மேலாகி விட்டது. தற்பொழுது இம்மண்டபம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வாடகைக்கு விடப்பட்டு வருகின்றது. இக்கட்டிடத்தின் மேற்கூரை மழைக்காலங்களில் ஒழுகுகின்றது. மேலும் முன்பக்கக் கதவு சிறுசிறு பழுதுகள்

ஏற்பட்டு உள்ளதால் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே அதனை சீரமைத்து வண்ணப்பூச்சு பூசுவதற்கென தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4,60,000/- ஆகும் மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 34 அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 15**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வி.எல்.சி. மைதானம் அருகிலுள்ள சமுதாய கழிப்பிடம் மற்றும் மார்த்தாண்டம் காய்கறி சந்தையிலுள்ள சமுதாய கழிப்பிடம் பராமரிப்பு பணி செய்ய ரூ.3.33 இலட்சத்தில் மேற்கொள்ள 11-03-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

1) திரு.சி. ராஜன், ஒப்பந்ததாரர் — மதிப்பீட்டை விட (-) 0.01% குறைவு (286284.00)

2) திரு.பி. ஜெயபிரகாஷ், ஒப்பந்ததாரர் — மதிப்பீட்டை விட (+) 4.21% அதிகம் (298367.00)

மேற்படி வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தத்தில் திரு.சி. ராஜன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட (-1) 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை வழங்கியுள்ளார். மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2127/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 35 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 16</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வி.எல்.சி. சமீபம் உள்ள கழிப்பறை பராமரிப்பு செய்வதற்கென மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதிக்கென நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு பின்பு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.19089/2021/இ2, நாள் 19-11-2021-ன் மூலம் Operational and Maintenance Gap Filling Interest Fund 2021-2022-ன்கீழ் சமுதாய கழிப்பிடங்களுக்கு 3.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி பணிக்கு 11-03-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

1) திரு.எ. ஆன்றணி ஒப்பந்ததாரர் — மதிப்பீட்டை விட (-) 0.14% குறைவு (260647.61)

2) திரு.எஸ். பாபு, ஒப்பந்ததாரர் — மதிப்பீட்டை விட (+) 0.12% அதிகம் (261335.00)

மேற்படி வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தத்தில் திரு.எ. ஆன்றணி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட (-1) 0.14% குறைவான (260647.61) ஒப்பந்தப்புள்ளியை வழங்கியுள்ளார். மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.2127/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 36 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 17</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 முதல் 21 வரையுள்ள நான்கு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் இருந்து மார்த்தாண்டம் மண்டலத்திலிருந்து குடிநீர் குழாய்கள் மூலம் வீடுகளுக்கு தண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது. இவ்வாறு குடிநீர் வினியோகம் செய்யப்படும் பிரதான குழாய் (Distribution Main) நீர்தேக்க தொட்டிகளுக்கு Filter house சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து Pumping Line மூலம் குடிநீர் ஏற்றப்படுகிறது. மேலும் பிரதான குழாய்கள் மற்றும் வினியோக

குழாய்கள், Sluice Volue, Air value மற்றும் பொது குழாய்கள் ஆகியவற்றில் ஏற்பட்டும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் வீணகாதவாறு பொதுமக்களுக்கு வினியோகம் செய்ய பராமரிப்பு தொகை ரூ.6.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேற்படி பணிக்கு 11-03-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டது. மேற்படி திரு.பி. ஜெயபிரகாஷ் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட (-) 24.95% குறைவு (388877.00) ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3047/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 37 மறு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 18</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 10 வரையுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நகராட்சியில் உள்ள நான்கு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் இருந்து குடிநீர் குழாய்கள் மூலம் வீடுகளுக்கு தண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது. இவ்வாறு குடிநீர் வினியோகம் செய்யப்படும் பிரதான குழாய் (Distribution Main) நீர்தேக்க தொட்டிகளுக்கு Filter house சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து Pumping Line மூலம் குடிநீர் ஏற்றப்படுகிறது. மேலும் பிரதான குழாய்கள் மற்றும் வினியோக குழாய்கள், Sluice Volue, Air value மற்றும் பொது குழாய்கள் ஆகியவற்றில் ஏற்பட்டும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் வீணகாதவாறு பொதுமக்களுக்கு வினியோகம் செய்ய பராமரிப்பு தொகை ரூ.6.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேற்படி பணிக்கு 11-03-2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே பெறப்பட்டது. மேற்படி திரு.பி. ஜெயபிரகாஷ் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட (-) 24.95% குறைவு

(388857.00) ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3046/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 38 மறு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 19**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11-ல் அமைந்துள்ள குருசடி முதல் சிங்கிளேயர் தெரு வரை உள்ள சாலை தற்பொழுது பெய்த மழையின் காரணமாகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குழாய் அமைத்ததாலும் மிகவும் சேதமடைந்து பொதுமக்களின் போக்குவரத்து மிகவும் பாதிப்படைந்து உள்ளது. இதனை சரி செய்ய ரூ.24.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகளை மேற்கொள்ள 18-03-2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.டி. ஜஸ்டின்குமார், | மதிப்பீட்டை விட (-) 0.08% குறைவு (2099724.00) |
| 2. | திரு.டி. பிறேம்குமார், | மதிப்பீட்டை விட (+) 1.85% அதிகம் (2140195.00) |

மேற்படி பணிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் திரு.டி. ஜஸ்டின்குமார், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட (-1) 0.08% குறைவான ஒப்பந்தப்புள்ளியை வழங்கியுள்ளார். மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.2607/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 39 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 20</u>**

குழித்துறை நகராட்சியில் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள குடிநீர் குழாய்கள் தெருவிளக்குகள் பராமரிப்பின் போது பழுதடைந்து மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள உதிரி பொருட்கள் மற்றும் இதர கழிவு செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்ய 07-03-2022 அன்று நடைபெற்ற ஏலத்தில் 7 நிபர்கள் கலந்து கொண்டனர். ஏலத்தொகையாக 1 கிலோ ரூ.27.00-க்கு திரு. ரசீது என்பவர் கேட்டுள்ளார். கோரப்பட்டுள்ளது. எனவே உயர்ந்த ஏலம் கோரிய நபருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.149/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 40 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 21</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பெருந்தெரு விநாயகர்கோவில் சமீபம் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதை சரி செய்யும் பணிக்கு ரூ.1.10 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகளை மேற்கொள்ள 11-03-2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.T. Regu, | மதிப்பீட்டை விட (+) 6296.26% அதிகம் (6030050.00) |
| 2. | திரு.A. Antony, | மதிப்பீட்டை விட (+) 7601.19% அதிகம் (6935000.00) |

மேற்படி பணிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளன. மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**3064/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 41 மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.**

**<u>பொருள் எண். 22</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் புதிய பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் மாவு அரைக்கும் கிரைண்டர் பழுதாகி மின்கசிவு ஏற்படுத்துவதாகவும் மற்றும் உணவகத்தில் குளிர்சாதன பெட்டி பழுதாகி உள்ளதாகவும் கடிதம் மூலம் தெரிவித்திருந்த நிலையில் பழுதடைந்த மாவு அரைக்கும் கிரைண்டர் மற்றும் குளிர் சாதன பெட்டி, மின் விசிறி, சுவர்களுக்கு வண்ணம் பூசுதல் போன்ற பணிகளை ரூ.2.10 இலட்சத்தில் மேற்கொள்ள 11-03-2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | J. Praveesh | மதிப்பீட்டை விட (-) 0.16% குறைவு (181110.72) |
| 2. | S. Babu | மதிப்பீட்டை விட (+) 0.36% அதிகம் (182047.72) |

மேற்படி பணிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் திரு.J. Praveesh ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட (-) 0.16% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.**2815/2021/இ1.

**மன்றத்தீர்மான எண். 42 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 23</u>**

குழித்துறை நகராட்சிக்கு அலுவலகத்தில் உள்ள ஆணையர் அறை மற்றும் சுகாதார பிரிவில் உள்ள சுகாதார அலுவலர் மற்றும் ஆய்வாளர் ஆகியோரின் அறையில் நீர் கசிந்து கூரைப்பகுதியில் உள்ள பூச்சு விழுந்து மிகவும் சேதமடைந்து காணப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் கன்னியாகுமரி அவர்களின் 21-12-2022 அன்று நேரடி ஆய்வின் போது அலுவலகத்தில் உடனடியாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வழங்கப்பட்ட அறிவுரையின்படி அவற்றை பூசி பராமரிக்கவும், சேதமடைந்துள்ள கதவை மாற்றி புதியதாக கதவு அமைக்கவும், வர்ணப்பூச்சு பூசவும், நகர்மன்ற தலைவர் அறைக்கு புதியதாக Air Conditioner வாங்கி பொருத்தவும் ரூ.2.80 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 11-03-2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | S. Babu | மதிப்பீட்டை விட (-) 0.09% குறைவு (241293,40) |
| 2. | A. Antony | மதிப்பீட்டை விட (+) 0.19% அதிகம் (241969.37) |

மேற்படி பணிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் திரு. S. Babu ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட (-)0.09% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.459/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 43 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 24</u>**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9-ல் அமைந்துள்ள விளவங்கோடு சாலையில் ஆற்றுக்கு செல்லும் வழியில் சமீபத்தில் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது சாலை பழுதடைந்து இரண்டாக பிரித்து மக்களின் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ளது. ஆற்றின் கரைக்கு செல்பவர்களும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே சாலையின் இருபுறமும் கான்கிரீட்டினால் தடுப்பு சுவர் அமைத்து சாலையை சீரமைப்பவதற்கென ரூ.16.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. செலவினத்தை வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றத்தீர்மான எண். 44 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 25</u>**

குழித்துறை நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்பிற்கு 2022-2023-ம் ஆண்டிற்கு செலுத்த வேண்டியை தொகை மற்றும் கட்டணத்தொகையை (2021-2022)-ம் ஆண்டிலிருந்து உயர்த்தி கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

**DOMESTIC**

| Sl.No | Length | Road Restoration | | | Domestic Deposit | Supervising charge | | | Domestic Total Amount |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Rate for 2021-2022 | 5% Increase | Rate for 2022-2023 | | Rate for 2021-2022 | 5% Increase | Rate for 2022-2023 | |
| Earthern / Gravel Road | | | | | | | | | |
| 1 | 0-15m | 1771 | 88.55 | 1860 | 3000 | 2592 | 129.60 | 2722 | 7582 |
| 2 | 16-30m | 3046 | 152.3 | 3198 | 3000 | 3799 | 189.95 | 3989 | 10187 |
| 3 | 31-45m | 4320 | 216 | 4536 | 3000 | 5331 | 266.55 | 5598 | 13134 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 46-75m | 6868 | 343.4 | 7211 | 3000 | 8036 | 401.80 | 8438 | 18649 |
| 5 | 76-90m | 8143 | 407.15 | 8550 | 3000 | 9380 | 469.00 | 9849 | 21399 |
| B.T Road | | | | | | | | | |
| 1 | 0-15m | 7919 | 395.95 | 8315 | 3000 | 3954 | 197.70 | 4152 | 15467 |
| 2 | 16-30m | 15373 | 768.65 | 16142 | 3000 | 6529 | 326.45 | 6855 | 25997 |
| 3 | 31-45m | 22779 | 1138.95 | 23918 | 3000 | 9507 | 475.35 | 9982 | 36900 |
| 4 | 46-75m | 37569 | 1878.45 | 39447 | 3000 | 14840 | 742.00 | 15582 | 58029 |
| 5 | 76-90m | 45059 | 2252.95 | 47312 | 3000 | 17556 | 877.80 | 18434 | 68746 |
| C.C Road | | | | | | | | | |
| 1 | 0-15m | 8184 | 409.20 | 8593 | 3000 | 4059 | 202.95 | 4262 | 15855 |
| 2 | 16-30m | 15903 | 795.15 | 16698 | 3000 | 6741 | 337.05 | 7078 | 26776 |
| 3 | 31-45m | 23573 | 1178.65 | 24752 | 3000 | 9835 | 491.75 | 10327 | 38079 |
| 4 | 46-75m | 38911 | 1945.55 | 40857 | 3000 | 15368 | 768.40 | 16136 | 59993 |
| 5 | 76-90m | 46646 | 2332.30 | 48978 | 3000 | 18910 | 945.50 | 19856 | 71834 |

**NON DOMESTIC**

| Sl.No | Length | Road Restoration | | | Domestic Deposit | Supervising charge | | | Domestic Total Amount |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Rate for 2021-2022 | 5% Increase | Rate for 2022-2023 | | Rate for 2021-2022 | 5% Increase | Rate for 2022-2023 | |
| Earthern / Gravel Road | | | | | | | | | |
| 1 | 0-15m | 1771 | 88.55 | 1860 | 6000 | 2592 | 129.60 | 2722 | 10582 |
| 2 | 16-30m | 3046 | 152.3 | 3198 | 6000 | 3799 | 189.95 | 3989 | 13187 |
| 3 | 31-45m | 4320 | 216 | 4536 | 6000 | 5331 | 266.55 | 5598 | 16134 |
| 4 | 46-75m | 6868 | 343.4 | 7211 | 6000 | 8036 | 401.80 | 8438 | 21649 |
| 5 | 76-90m | 8143 | 407.15 | 8550 | 6000 | 9380 | 469.00 | 9849 | 24399 |
| | | | | | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| B.T Road | | | | | | | | | |
| 1 | 0-15m | 7919 | 395.95 | 8315 | 6000 | 3954 | 197.70 | 4152 | 18467 |
| 2 | 16-30m | 15373 | 768.65 | 16142 | 6000 | 6529 | 326.45 | 6855 | 28997 |
| 3 | 31-45m | 22779 | 1138.95 | 23918 | 6000 | 9507 | 475.35 | 9982 | 39900 |
| 4 | 46-75m | 37569 | 1878.45 | 39447 | 6000 | 14840 | 742.00 | 15582 | 61029 |
| 5 | 76-90m | 45059 | 2252.95 | 47312 | 6000 | 17556 | 877.80 | 18434 | 71746 |
| C.C Road | | | | | | | | | |
| 1 | 0-15m | 8184 | 409.20 | 8593 | 6000 | 4059 | 202.95 | 4262 | 18855 |
| 2 | 16-30m | 15903 | 795.15 | 16698 | 6000 | 6741 | 337.05 | 7078 | 29776 |
| 3 | 31-45m | 23573 | 1178.65 | 24752 | 6000 | 9835 | 491.75 | 10327 | 41079 |
| 4 | 46-75m | 38911 | 1945.55 | 40857 | 6000 | 15368 | 768.40 | 16136 | 62993 |
| 5 | 76-90m | 46646 | 2332.30 | 48978 | 6000 | 18910 | 945.50 | 19856 | 74834 |

மேலும் குடிநீர் இணைப்பில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 2022-2023 ஆண்டிற்கு சிமெண்ட் தளம் தார்தளம் மற்றும் மண் தரைக்கு ரூ.890/- வீதம் வசூல் செய்திடவும் மேற்கண்ட விலை விதிப்படி 2022-2023 ஆண்டிற்கு மதிப்பீடு செய்ய மன்ற அனுமதிக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2914/2022/இ1.

**மன்றத்தீர்மான எண். 45 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நகரப்பகுதியில் குழாய் பதிக்கும் வேலை முடிந்த பிறகு கட்டண உயர்வு குறித்து மன்றத்தில் வைத்து பரிசீலிக்கலாம்.**

**ஒப்பம்**/- திரு.பொன். ஆசைத்தம்பி
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.

# <u>குழித்துறை நகராட்சி</u>

## <u>குழித்துறை நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் 31-03-2022 வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மனறப்பொருள் மற்றும் தீர்மானங்கள்.</u>

**<u>பொருள் எண். 1</u>**

குழித்துறை நகராட்சியின் 2022-2023-ம் நிதியாண்டிற்கான வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதிக்குரிய வரவு செலவு (பட்ஜெட்) திட்டமதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.550/2019/பி1.

**மன்றத்தீர்மான எண். 46 அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 2</u>**

குழித்துறை நகராட்சி பகுதிகளில் உள்ள வீடுகளில் தினசரி சேகரமாகும் மக்கும் குப்பைகளை தனது வீட்டில் உரமாக்கிட (Home Compost) மற்றும் (Pipe compost) குழாய் மூலம் உரமாக்கும் திட்டம் அமைத்து மக்கும் குப்பைகளை உரமாக்கி விட வேண்டும் மற்றும் தனது வீட்டில் உருவாகும் கழிவுநீரை வடிகாலில் விடாமல் தனது வீட்டின் பகுதியில் (Soak pit) கழிவுநீர் உறிஞ்சு குழி அமைக்கப்பட வேண்டும் எனவும் அரசால் தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பயன்படுத்துவதை தடை செய்திடவும், பிளாஸ்டிக் விற்பனை செய்பவர்களுக்கு அபராதம் விதித்திடவும் 29-03-2022-ம் தேதி கன்னியாகுமரி

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. மேற்படி நடைமுறையினை இந்நகராட்சி பகுதியில் செயல்படுத்தப்படவுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
ந.க.எண்.1151/2017/அ2.

**மன்றத்தீர்மான எண். 47 அனுமதிக்கப்பட்டது**

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.